## கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
## முன்னிலை: திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான், இ.ஆ.ப.,

<u>செ.மு.எண்.ஈ4/23329/2016</u> <u>நாள் : 02.11.2016</u>

**பொருள்:** பணியமைப்பு - ஊரக வளர்ச்சி அலகு - கன்னியாகுமரி மாவட்டம் - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி-IV-ல் தேர்வு செய்யப்பட்டு தட்டச்சராக நியமிக்கப்பட்டவருக்கு பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடுதல் - தொடர்பாக.

**பார்வை:**
1. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை, கடித எண். 5845/PSD-F/2014 நாள்: 20.06.2016.
2. மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் பரிந்துரை நாள். 21.10.2016.
3. பணியாளரின் பணிப்பதிவேடு.

******

**உத்தரவு :-**

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் 2013-14 தொகுதி IV தேர்வின் மூலம் தேர்வு செய்யப்பட்டு பார்வை 1ன் படி ஒதுக்கீடு பெற்று கன்னியாகுமரி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் தட்டச்சராக பணிபுரிந்து வரும் பணியாளருக்கு தட்டச்சர் நிலையில் பணிவரன்முறை செய்திட கருத்துரு பார்வை 2-ன்படி வரப்பெற்றுள்ளது.

எனவே, 2013-14-ம் ஆண்டு TNPSC-தொகுதி IV மூலம் தேர்வு செய்யப்பட்டு தட்டச்சராக பணிபுரிந்து வரும் பணியாளருக்கு கீழ்க்கண்ட நிபந்தனையுடன் கலம் 4-ல் குறிப்பிட்டுள்ளவாறு பணியேற்ற நாள் முதல் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

**"The regularization is subject to the outcome of the WPs pending in the files of Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Group IV services for the year 2013-2014 recruitment".**

| வ. எண். | பெயர், பதவி மற்றும் அலுவலகம் | பணியேற்ற நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | திருமதி. V. லதா,<br>தட்டச்சர்,<br>செயற்பொறியாளர் (ஊ.வ)<br>அலுவலகம் நாகர்கோவில். | 29.06.2016<br>முற்பகல் | 29.06.2016<br>முற்பகல் |



மேலும், மேற்படி பணியாளர் பணி பணிவரன்முறை செய்யப்பட்டுள்ள தேதி முதல் தொடர்ச்சியான மூன்றாண்டு காலத்திற்குள், இரண்டாண்டு பணிக்காலத்தில் தகுதிகாண் பருவத்திலிருப்பார்.

இவர் தகுதிகாண் பருவக்காலத்திற்குள் ஊரக வளர்ச்சித்துறையில் உள்ள அனைத்து துறைத்தேர்வுகளிலும் மற்றும் தாய்மொழி தமிழ் தவிர வேறு மொழியாகயிருப்பின் தமிழ் தேர்விலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

இவ்வுத்தரவு விவரம் மேற்காணும் பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும் சான்றளிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியருக்காக,
கன்னியாகுமரி மாவட்டம்.
02/11/16

பெறுநர்
சம்பந்தப்பட்ட பணியாளர் (உரிய வழியாக)

நகல்:
1. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை.
2. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை.
3. ஈ2/ ஈ4 பிரிவு இருப்பு கோப்பு.